ஊட்டி காய்கறிகள் விலை நிலவரம்

கேரட்	ரூ.10-23	முள்ளங்கி	ரூ.5-15
பீட்ரூட்	ரூ.15-40	சௌசௌ	ரூ.10-18
முட்டைகோஸ்	ரூ.4-8	டர்னீப்	ரூ.15-45
பீன்ஸ்	ரூ.45-65	நூல்கோல்	ரூ.10-25

நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கம் உருளைக்கிழங்கு விலை நிலவரம்

ராசி உருளைக்கிழங்கு

குறைந்தபட்சம் ரூ.860 | அதிகபட்சம் ரூ.1410

பொடி உருளைக்கிழங்கு

குறைந்தபட்சம் ரூ.100 | அதிகபட்சம் ரூ.220

மஹா கும்பாபிஷேக திருவிழா

நீலகிரி மாவட்டம் ஊட்டி ஹில்பங்க் பகுதியில் அமைந்துள் ஸ்ரீ வரசக்தி விநாயகர் திருக்கோயில் மஹா கும்பாபிஷேக திருவிழா நடந்தது.

வன விலங்குகளின் தொல்லை அதிகரிப்பு

விவசாயிகள், பொதுமக்களுக்கு பாதிப்பு

ஊட்டி,ஏப்.3: நீலகிரியில் வன விலங்குகளின் தொல்லை அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நீலகிரியில் மழை பெய்யாத நிலையில், நீலகிரி மாவட்டத்தில் அனைத்து வனங்களும் வறட்சியின் பிடியில் சிக்கியுள்ளன.வனங்களில் உள்ள குளங்கள், குட்டைகள் மற்றும் நீரோடைகளில் தண்ணீர் இன்றி வறண்டு காணப்படுகிறது. விலங்குகளுக்கு தேவையான தண்ணீர் மற்றும் உணவு கிடைப்பதில்லை.காட்டு யானை, காட்டு மாடு, மான்கள், பன்றிகள் மற்றும் குரங்கு உட்பட அனைத்து விலங்குகளும் தற்போது மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு படையெடுக்க துவங்கியுள்ளன.

குறிப்பாக, விவசாய நிலங்களை நோக்கி வர துவங்கிவிட்டன. விலங்குகளின் தொல்லையால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக, ஊட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் தற்போது காட்டு மாடு, காட்டு பன்றி, மான் மற்றும் குரங்குகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இவைகளிடம் இருந்து மலை காய்கறிகளை காப்பது சவாலாகவே உள்ளது. எனவே, வனத்துறையினர் காட்டு மாடு, பன்றிகள் மற்றும் குரங்குகள் விவசாய நிலங்களுக்குள் வர விடாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். மேலும், விலங்குகளின் தாகத்தை தீர்க்க அந்தந்த பகுதிகளில் உள்ள வனங்களில் தொட்டிகளை அமைத்து அதில் நீரை கொண்டு சென்று ஊற்றுவதன் மூலம் மக்கள் வாழும் பகுதிக்கு விலங்குகள் வருவதை தவிர்க்கலாம் என பலரும் கருத்து தெரிவிக்கின்றனர். இதற்கிடையில் தற்போது அதிகரட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் மூன்று யானைகள் விவசாய நிலங்களை துவம்சம் செய்து வருவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுவிதா செயலி மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது

உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அதிகாரிகளுக்கு கலெக்டர் அறிவுரை

ஊட்டி,ஏப்.3: சுவிதா செயலி மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என தேர்தல் அதிகாரிகளுக்கு கலெக்டர் அறிவுரை வழங்கினார்.

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026ஐ முன்னிட்டு நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் அனைத்து தேர்தல் பொறுப்பு அலுவலர்களுடன் தேர்தல் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு, மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமை வகித்தார். கூட்டத்தில் வரும் சட்டமன்ற தேர்தலின் போது மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்தும், நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

தொடர்ந்து, கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு கூறியதாவது: இந்திய தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளபடி, தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026ஐ முன்னிட்டு, நமது மாவட்டத்தில் உள்ள அனைத்து தேர்தல் பொறுப்பு அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும். மேலும், சி-விஜில்., செயலியில் பெறப்படும் புகார்கள் மீது உடன் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக, தேர்தல் நடத்தை விதிமுறை மீறல்களாக கருதப்படும் பதாகைகள், சுவரொட்டிகள் போன்ற புகார்களுக்கு சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பின் அலுவலர்கள் மூலம் அகற்றவும், பணம் மற்றும் பரிசு பொருட்கள் போன்ற புகார்களுக்கு பறக்கும் படையினர் மூலமாகவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

அனைத்து வாக்குச்சாவடிகளிலும் அடிப்படை வசதிகளான சாய்வுதளம், குடிநீர், கழிப்பறை, மின்சாரம் உள்ளிட்ட வசதிகள் இருப்பதை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் ஆய்வு மேற்கொண்டு, உறுதி செய்ய வேண்டும்.

மேலும், அனுமதி அளித்த விண்ணப்பங்களில் குறிப்பிட்டுள்ளவாறு பிரச்சார பணிகள் மேற்கொள்ளப்படுகிறதா என்பதனையும் கண்காணிக்க வேண்டும். தேர்தல் நடத்தும் அலுவலர்களுடன் கலந்தாலோசித்து, வனத்துறை உதவியுடன் பழங்குடியினர்கள் மற்றும் தேயிலை தோட்டத்தொழிலாளர்கள் வாக்குப்பதிவு நாளன்று, எளிதாக வாக்குச்சாவடிக்கு சென்று வாக்குப்பதிவு மேற்கொள்ளும் வகையில், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி தர வேண்டும்.

தேவைப்படும் பட்சத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர் மூலம், போக்குவரத்து வசதிகள் செய்து தர வேண்டும். இளம்வாக்காளர்கள் மற்றும் வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியம் குறித்து, விழிப்புணர்வு மேற்கொள்ளும் வகையில், தேர்தல் கல்விக்குழுவில் உள்ள மாணவ, மாணவியர்களை ஈடுபடுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இக்கூட்டத்தில், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் மற்றும் கூடுதல் கலெக்டர் (வளர்ச்சி) அபிலாஷா கௌர், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், தேர்தல் கட்டுப்பாட்டு அறை பொறுப்பு அலுவலர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் (ஜென்மம் நிலங்கள்) வாசுகி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) லோகநாயகி மற்றும் அனைத்து பொறுப்பு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நெம்மாரா- வல்லங்கியில் பட்டாசு திருவிழா இன்று துவங்குகிறது

பாலக்காடு,ஏப்.3: கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டத்தில் பிரசித்திபெற்ற நெம்மாரா-வல்லங்கி நெல்லிக்குளங்கரை பகவதி அம்மன் கோயில் பட்டாசு திருவிழா வெகுவிமர்சையாக இன்றும், நாளையும் நடைபெறுகிறது.

நெம்மாரா-வல்லங்கி ஊர்களின் நடுவே நெல்லிக்குளங்கரை பகவதி அம்மன்கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி 20வது நாள் அம்மனுக்கு ஊர் மக்கள் திருவிழா எடுத்துக் கொண்டாடி வருவது வழக்கமாகும்.

இந்நிலையில் விஷேச நாளான இன்று(3ம் தேதி) காலை அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்கார பூஜைகள் என நடைபெறவுள்ளது.தொடர்ந்து செண்டை வாத்யத்துடன் அம்மனின் அலங்கார அணிகலன்களான கால் சிலம்பு,அரைமணிகள்,வாள், ஆகிய வீதியுலா வாக மூலஸ்தானத்திலிருந்து எடுத்துவரப்படுகின்றன.

தொடர்ந்து நெம்மாரா பிரிவினரின் மூலஸ்தானமான வேட்டைக்கொருமகன் கோயிலிருந்து 15 யானைகள் அலங்கார அணிவகுப்புடன் வீதியுலா புறப்பட்டு நெம்மாரா அக்ரஹாரம், பஸ் நிலையம், போத்துண்டி சாலை வழியாக கோயிலின் அருகாமையில் அமைக்கப்பட்டுள்ள யானைப் பந்தலை வந்தடைகிறது. இதனைப்போன்று வல்லங்கி பிரிவனரின் அலங்கரித்த 15 யானைகள் மீது அம்மன் அமர்ந்தப்படி சிவன் கோயிலிலிருந்து பஞ்சவாத்யத்துடன் புறப்பட்டு வல்லங்கி குளக்கரை,கடைவீதி வழியாக பைபாஸ் சாலையில் அமைக்கப்பட்டுள்ள யானைப்பந்தலை வந்தடைகின்றது.

தொடர்ந்து செண்டைவாத்யங்கள் இசைக்கேற்ப யானைகளின் மீது வண்ண முத்துமணி குடைமாற்றம் நிகழ்ச்சி நடைபெறுகின்றன. இதனையடுத்து அலங்கரித்த யானைகள் கோயில் வளாகத்தில் வலம் வருகின்றன.

இன்று மாலை 5.30 மணியளவில் கோயிலின் முன்பாக அமைந்துள்ள வயக்காடுகளில் பட்டாசு வானவேடிக்கைகள் நடைபெறுகிறது.

இதனைத்தொடர்ந்து நாளை(4ம்தேதி) அதிகாலை 3 மணியளவில் இரு தரப்பினரின் வானவேடிக்கை நடைபெறவுள்ளது. நெம்மாரா வல்லங்கி திருவிழாவையொட்டி யானைப்பந்தல்கள் வண்ணமிகு அலங்கார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

பாலக்காடு மாவட்டத்தில் பிரபலமான நெம்மாரா - வல்லங்கி நெல்லிக்குளங்கரை பகவதி அம்மன் கோயில் திருவிழாவில் யானை பந்தல்கள் வண்ண விளக்குகளால் ஜொலிக்கின்றன.

போலீசார் கொடி அணிவகுப்பு

பாலக்காடு, ஏப்.3: பாலக்காடு மாவட்டத்தில் திருத்தாலா, பட்டாம்பி, ஷொர்ணூர், ஒத்தப்பாலம், கோங்காடு, மன்னார்க்காடு, மலம்புழா, பாலக்காடு, தரூர், சித்தூர், நெம்மாரா மற்றும் ஆலத்தூர் ஆகிய 12 சட்டமன்ற தொகுதிகளில் ஏப்.9ம் தேதி தேர்தல் நடபெறவுள்ளது. இதையொட்டி பாலக்காடு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் போலீசாரின் கொடி அணிவகுப்பு நடைபெற்றது. பாலக்காடு மாவட்டத்தில் புதுநகரம், கொழிஞ்சாம்பாறை, சாலிச்சேரி, பாலக்காடு டவுன் ஆகிய இடங்களில் போலீசாரின் கொடி அணிவகுப்பு நடந்தது. இதில் மாநில அரசு போலீசார், ராணுவப்படையினர் மற்றும் கர்நாடகா ரிசர்வ் போலீசார் ஆகியோர் பங்கேற்று தேர்தல் அமைதியான முறையில் நடைபெறவும், வாக்காளர்கள் பதட்டம் இல்லாமல் தங்களது வாக்குகளை செலுத்தவும், சட்டம் ஒழுங்கு சீர்குலையாமல் காத்திடவும் உறுதி எடுத்து விழிப்புணர்வு மேற்கொண்டனர்.

சட்டமன்ற தேர்தல் நடைபெறுவதையொட்டி பாலக்காடு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் போலீசாரின் அணிவகுப்பு நடைபெற்றது.

நடைபாதையை சீரமைக்க மக்கள் கோரிக்கை

ஊட்டி, ஏப்.3: ஊட்டி ஸ்டேட் பேங்க் லேன் செல்லும் நடைபாதையில் உள்ள இன்டர்லாக் கற்கள் சேதமடைந்து காணப்படுவதால் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது.

ஊட்டி கமர்சியல் சாலையில் இருந்து கலெக்டர் அலுவலகம், ஸ்டேட் பேங்க், ஜி1 காவல் நிலையம் உள்ளிட்டவற்றிற்கு செல்வதற்கு நடைபாதை உள்ளது. இந்த நடைபாதையை பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர். மேலும் கடைகள், வணிக வளாகங்கள் போன்றவைகளும் உள்ளன. இந்நிலையில் இந்த நடைபாதையில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இன்டர்லாக் கற்கள் கொண்டு சீரமைக்கப்பட்டது. இந்நிலையில் இவை தற்போது சேதமடைந்தும், இன்டர்லாக் கற்கள் பெயர்ந்தும் காணப்படுகிறது. எனவே பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தப்படும் இந்த நடைபாதையை சீரமைத்திட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

கோத்தகிரி வட்டார தோட்டக்கலை துறை சார்பில்

அங்கக இடுபொருட்கள் தொகுப்பு விநியோகம்

கோத்தகிரியில் தோட்டக்கலை துறை சார்பில் விவசாயிகளுக்கு அங்கக இடுபொருட்களின் தொகுப்புகள் மற்றும் நெகிழி கூடைகள் வழங்கப்பட்டது.

ஊட்டி, ஏப். 3: நீலகிரி மாவட்டம் கோத்தகிரி வட்டாரம் தோட்டக்கலை மலை பயிர்கள் துறை சார்பில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தின் கீழ் தோட்டக்கலை உதவி இயக்குனர் பரத்குமார் வழிகாட்டுதலின் படி அங்கக முறையில் காய்கறி சாகுபடி குறித்த செயல்முறை விளக்கம் நடந்தது.

இச்செயல்முறை விளக்க பயிற்சியில் அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரசாந்த் அங்கக முறையில் காய்கறி சாகுபடி மேற்கொள்ளும் போது ஏற்படும் இடற்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். உதவி தொழில்நுட்ப மேலாளர் அறிவுச்செல்வன் வேளாண் மற்றும் வேளாண் சகோதர துறைகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் மானிய திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர் சர்குணசீலன் அங்கக முறையில் பூச்சி மற்றும் நோய் தாக்குதலிலிருந்து பயிர்களை உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளான டிரைகோடெர்மா விரிடி, பசிலோமைசிஸ் மற்றும் பேவேரிய ஆகியவற்றை கொண்டு கட்டுபடுத்தும் முறைகள் குறித்து விளக்கினார். விவசாயிகளுக்கு அங்கக இடுபொருட்களின் தொகுப்புகள் மற்றும் நெகிழி கூடைகள் இலவசமாக வழங்கப்பட்டது.

வர்த்தக சிலிண்டர் விலை உயர்வை கண்டித்து காங். கண்டன பேரணி

பாலக்காடு,ஏப்.3: வர்த்தக சிலிண்டரின் விலை உயர்வைக் கண்டித்து பாலக்காடு டவுன் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக கமிட்டி சார்பில் கண்டன பேரணி நடைபெற்றது. இந்த பேரணியில் ஏராளமான காங்கிரஸ் தொண்டர்களும், ஓட்டல் உரிமையாளர்களும்,தொழிலாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்த பேரணி காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்திலிருந்து தொடங்கி பாலக்காடு நகராட்சி ஸ்டேடியம் பஸ் நிலையம் அருகே நிறைவு பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை மாவட்ட காங்கிரஸ் கமிட்டி பொதுச்செயலாளர் பாலன் தொடங்கி வைத்தார்.பிளாக் காங்கிரஸ் கமிட்டி தலைவர் சதீஷ் தலைமை வகித்தார். காங்கிரஸ் பிரமுகர்களான செய்தலவி,முஸ்தபா,ராஜேந்திரன் நாயர்,சுதாகரன்,கிருஷ்ணன்,ஹரிதாஸ், நிகில் ஆகியோர் உட்பட ஏராளமான காங்கிரஸ் தொண்டர்கள் பங்கேற்றிருந்தனர். முன்னதாக பிரதமர் மோடியின் உருவ பொம்மை எரித்து எதிர்ப்புகளை தெரிவித்தனர்.

மஞ்சூரில் பூத்த அதிசய நிஷாகந்தி மலர்

மஞ்சூரில் பூத்த அதிசய நிஷாகந்தி மலர்.

மஞ்சூர், ஏப்.3: ஆண்டுக்கொருமுறை மட்டுமே பூக்கும் அதிசய நிஷாகந்தி மலர் மஞ்சூரில் பூத்தது. நீலகிரி மாவட்டம் மஞ்சூரில் வசிப்பவர் பேபி. இவரின் வீட்டில் ரோஜா, டேலியா, சாமந்தி, நிஷாகந்தி உள்பட பல வகையிலான பூச்செடிகளை வளர்த்து வருகிறார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை அவரது தொட்டியில் வைக்கப்பட்டிருந்த செடியில் நிஷாகந்தி மலர் பூத்தது.

வெண்மை நிறத்தில் பூத்துள்ள இந்த நிஷாகந்தி மலர் மாலையில் பூத்து மறுநாள் காலையில் வாடும் தன்மை கொண்டது. 'இரவின் ராணி' என்றும், 'பிரம்மகமலம்' என்றும் அழைக்கப்படும் இந்த மலரின் தாவரவியல் பெயர் 'எபிபைலம் ஆக்சிபெலடம்' என்பதாகும்.

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: கல்யாணி டவர், எண்.21 A/C, காபூர்கான் தெரு, உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம், தமிழ்நாடு-642126

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப–கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது.

கடனீட்டு சொத்துகள் அவை **எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் 24.04.2026 தேதியன்று** மின்–ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்–ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/ கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த விண்ணங்கங்கள் / நிதியல்லாத வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண். LAP0694200000005057494 வீரமுமார் ஆறுசாமி (கடன்தாரர்), ஸ்ரேயா சமர்னிகா G (உப கடன்தாரர்) சரோஜா ஆறுசாமி	அறிவிப்பு தேதி: 11.11.2025 மொத்த நிலுவைத் தொகை: 11.11.2025 தேதியின்படி ரூ.11,14,489/– (ரூபாய் பதினொரு லட்சத்து பதினான்காயிரத்து நானூற்று எண்பத்து ஒன்பது மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு @18% வட்டி.	கையக	திருப்பூர் பதிவு மாவட்டம், வெள்ளக்கோவில் சார் பதிவு மாவட்டம், காங்கேயம் வட்டம், திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவில் கிராமம், பழைய S.No.478/1, புதிய S.No.478/1a1a1aia, பட்டா எண்.15288 இன்படி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் உள்ள சொத்து. அளவீடு: கிழக்கு மேற்காக வடக்கு பக்கத்தில் 18 அடி, தெற்கு பக்கத்தில் 18 அடி, வடக்கு தெற்கு மேற்கு பக்கத்தில் 72 அடி, கிழக்குப் பக்கத்தில் 72 அடி. மொத்தம் 1296 ச.அடி பரப்பளவு உள்ள நிலம் மற்றும் அனைத்து பயன்பாட்டு உரிமைகள் மற்றும் பாதை உரிமைகள் உள்ள சொத்து. **எல்லைகள்: கிழக்கு மற்றும் தெற்கு:** மீதமுள்ள சொத்து, **மேற்கு:** செல்வியின் சொத்து, **வடக்கு:** 30 அடி அகல கிழக்கு மேற்கு பொது பாதை. இந்தச் சொத்தில் கதவு எண்.1561 உள்ள கட்டிடம், அதில் மின்சார இணைப்பு எண்.03–089–002–1652, பொதுவான வழக்கமான உரிகைள், சுற்றுச்சுவர், தண்ணீர் வசதி, பாதை உரிமை மற்றும் அனைத்து பயன்பாட்டு உரிமைகள் உள்ளன.	Rs. 1000000.00/- (ரூபாய் பத்து லட்சம் மட்டும்)	Rs. 100000.00/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்)	18-04-2026 Before 5 PM	10,000/-	13-04-2026 (11AM – 4PM)	20-04-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை
2	கடன் எண். LAP0610200000005056582 & HL001181000000050 29035 சதிஷ் கந்தசாமி (கடன்தாரர்), துர்கா K (உப கடன்தாரர்) ஜெகதீஷ் கந்தசாமி	அறிவிப்பு தேதி: 08.08.2025 மொத்த நிலுவைத் தொகை: கடன் எண்: LAP0610200000005056582 – இன் கீழ் உள்ள ரூ.2,84,264.00/– மற்றும் கடன் எண்: HL0011810000005029035 – இன் கீழ் உள்ள ரூ.24,66,519.00 ஆகியவை உள்ளடங்கிய ரூ.27,50,783.00/– (ரூபாய் இருபத்தேழு லட்சத்து ஐம்பதாயிரத்து எழுநூற்று எண்பத்து மூன்று மட்டும்) தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு முறையே @18% & 13.60% வட்டியுடன்.	கையக	கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், அவினாசி சார் பதிவு மாவட்டம், அவினாசி வட்டம், ஈட்டிவீரம்பாளையம் கிராமம், S.F.No.100, ஏக்கர் 9.14 உள்ள சொத்தில் புதிய S.F.No.100/2 இன் 4.50 ஏக்கர் நிலம் சாலைகள் மற்றும் இதர வசதிகளுடன் வீட்டு மனைகளாக ஆர்.பி.எஸ்.நகர் என்ற பெயருடைய மனைத்திட்டத்தில் மாற்றப்பட்டுள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. அதில் மனை எண்.10 பின்வரும் எல்லைகளும் அளவீடுகளும் கொண்டது. **எல்லைகள்: வடக்கில்:** மனை எண்.11, **தெற்கில்:** மனை எண்.9, **கிழக்கில்:** 23 அடி தெற்கு வடக்கு லேஅவுட் சாலை, **மேற்கில்:** சாமியப்பனின் சொத்து. **அளவீடு:** கிழக்கு மேற்காக வடக்கு பக்கம்.40.0 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்கு பக்கம். 40.0 அடி, தெற்கிலிருந்து வடக்காக கிழக்கு பக்கம்.23.0 அடி, தெற்கிலிருந்து வடக்காக மேற்கு பக்கம்.23.0 அடி, மொத்தம் 85.50 ச.மீட்டருக்குச் சமமான 920 ச.அடி நிலத்தில் ஆர்சிசி கட்டம் கட்டப்பட்டுள்ளது. அதில் உள்செல்லும், வெளிவரும் அனைத்து சாலை வசதிகளும், வழக்கமான நடைபாதை உரிமைகளும், சாலைகளைப் பயன்படுத்தும் உரிமைகளும் மற்றும் அனைத்து வசதிகளும் இணைக்கப்பட்டுள்ள சொத்து. இந்த சொத்து ஈட்டிவீரம்பாளையம் பஞ்சாயத்து எல்லைக்குள் உள்ளது.	Rs. 1600000.00/- (ரூபாய் பதினாறு லட்சம் மட்டும்)	Rs. 160000.00/- (ரூபாய் ஒரு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்)	18-04-2026 Before 5 PM	10,000/-	13-04-2026 (11AM – 4PM)	20-04-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்க்யான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக **க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ்** A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, **ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட்,** பான்ஞ்சீல் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 18.04.2026 தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை **முதல் தளம், எண்.86/11, ஆலந்தூர் சாலை, சைதாப்பேட்டை, சென்னை–600015, கைபேசி எண்.** +91 9597907666, மின்னஞ்சல் முகவரி baskaran.soundarrajan@grihumhousing.com இல் தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரி